


முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் நகரக் கழகம் சார்பில் மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாதன் தலைமையில் நகரக் கழகச் செயலாளர் எஸ்.முருகானந்தம் முன்னிலையில் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், நகர்மன்றத் தலைவர் கு.பாப்புகண்ணன் உள்பட மாவட்ட, நகரக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாள் விழா!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்,ராஜூ தலைமையில் மலர்தூவி மரியாதை!

நீலகிரி, ஜூன் 6 -

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழா நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட தி.மு.க. அலுவலான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது.

நிகழ்சிசக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளரும், குன்னூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.எம்.ராஜூ தலைமையேற்று தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும், அலங்கரித்து வைக்கப்பட்ட கலைஞர் அவர்களின் திருவுருவச் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தியும், கழகக் கொடி யேற்றி வைத்து இனிப்புகளை வழங்கினார்.

மாவட்டக் கழக அவைத் தலைவர் போஜன், மாவட்டத் துணைச் செயலாளர் ரவிகுமார், மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், தம்பி இஸ்மாயில், உதகை நகரச் செயலாளர்கள் ஜார்ஜ், ரமேஷ், உதகை தெற்கு கிழக்கு ஒன்றியச் செயலாளர் பரமசிவன், உதகை வடக்கு மேற்கு ஒன்றியச் செயலாளர் தொரை, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் வாணீஸ்வரி, மகேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் முஸ்தபா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் இமயம் சசிகுமார், ராஜா, காந்தல் ரவி, உதகை நகர துணைச் செயலாளர் இச்சுபாய், நகரப் பொருளாளர் அணில்குமார், மாவட்டப் பிரதிநிதிகள் கார்திக், வெங்கடேஷ், சத்தியநாதன், ஒன்றிய துணை செயலாளர் பாலசுப்ரமணியும், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் நாகராஜ், மேத்யூஸ், விஜயகுமார், ரகுபதி, மார்கெட் ரவி, கீதா, தியாகு, கஜேந்திரன், செல்வராஜ், விஸ்வநாதன், ராஜ்குமார், சந்திரசேகர், கோபால், மஞ்சுகுமார், உதகை நகரமன்ற உறுப்பினர்கள் சசிகுமார், மீனா, வனிதா, பிரியா, மேரி புளோரீனா, அனிதா லட்சுமி, உதகை நகர இளைஞர்அணி நிர்வாகிகள் விஷ்னு, யாசர் மற்றும் கழக நிர்வாகிகள் மகேஷ், சுபீர், சாரதா, சர்மிளா, வீராசாமி, சங்கர், நீல் ஆம்ஸ்டிராங், ரஞ்சித், ஸ்டான்லி, டிட்டோன், உமேஸ், அக்கீம், பைசல், சேது, சதாசிவம், லூயிசா, விஜயகுமாரி உட்பட கழக நிர்வாகிள் திரளாக கலந்துகொண்டனர்.


### சேலம் – வழக்கறிஞர் பி.கே.பாபுவின் தந்தை

# கழக மூத்த உறுப்பினர் பி.கந்தசாமி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சேலம், ஜூன் 6 -

சேலம் மாநில உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்றச் செயலாளர் வழக்கறிஞர் பி.கே.பாபுவின் தந்தையும், செவ்வாய்ப்பேட்டை லாரி மார்க்கெட் தி.மு.க. முப்பெரும் விழா குழு பொருளாளரும், அரிசி பாளையம் மூத்த தி.மு.க. உறுப்பினருமான பி.கந்தசாமி (வயது 75) இயற்கை எய்தினார்.



அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும், இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் கடிதம் அனுப்பியுள்ளார்கள்.

இதில் சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன், சேலம் மாநராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், மாவட்டக் கழக பகுதி, ஒன்றியக் கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட உதயநிதி நற்பணி மன்ற நிர்வாகிகள், தி.மு.க. அணிகளின் நிர்வாகிகள், கழகத்தினர் அன்னாரின் உடலுக்கு மாலை அணிவித்து இறுதி அஞ்சலி தெரிவித்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதியின் சார்பில் முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்தியலிங்கம் ஏற்பாட்டில் தஞ்சாவூர் அன்பாலயம் மனநல காப்பகத்தில் உள்ளவர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. உடன் ச.முரசொலி எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ.கள் எம்.இராமச்சந்திரன், கே.டி.மகேஷ் கிருஷ்ணசாமி, மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட தி.மு.க. அலுவலான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. நிகழ்சிசக்கு மாவட்டப் பொறுப்பாளரும், குன்னூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.எம்.ராஜு தலைமையேற்று தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும், அலங்கரித்து வைக்கப்பட்ட கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தியும், கழகக் கொடியேற்றி, இனிப்பு வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர்.

### ஜூன் 8–ஆம் தேதி டெல்லியில் காங்கிரஸ் பங்கேற்கும்

# “இந்தியா” கூட்டணி கூட்டத்தில் தி.மு.க. பங்கேற்காது!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 6 –

வருகிற ஜூன் 8–ஆம் தேதி டெல்லியில் காங்கிரஸ் பங்கேற்கும் ‘‘இந்தியா’’ கூட்டணி கூட்டத்தில் தி.மு.கழகம் பங்கேற்காது என தலைமைக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தலைமைக் கழக அறிவிப்பு வருமாறு:–

**டெல்லி “கான்ஸ்டிடியூஷன் கிளப்பில்” வருகின்ற ஜூன் 8–ஆம் தேதி நடைபெறும் “இந்தியா” கூட்டணிக் கட்சிகளின் கூட்டத்திற்கு வருமாறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

**திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை நீட் தேர்வு, தொகுதி மறுசீரமைப்பு, அவசர அவசரமாகத் தேர்தல் நேரத்தில் திணிக்கப்பட்ட SIR, தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள், ஒரே நாடு – ஒரே தேர்தல், வக்பு சட்டம், FCRA சட்டத் திருத்தம் உள்ளிட்ட – ஜனநாயகத்திற்கும், மதச்சார்பின்மைக்கும், மாநில உரிமைகளுக்கும் எதிரான அனைத்திற்கும் தொடக்கம் முதலே, முதல் அரசியல் இயக்கமாகத் துணிச்சலுடன் எதிர்த்து நின்றது. அதற்கான நடவடிக்கைகளை ஜனநாயக ரீதியில் நாடாளுமன்றத்திலும், ஆட்சியில் இருந்த நேரத்தில் சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும், உரிய நேரத்தில் நீதிமன்றங்களிலும் எடுத்து வைத்து வாதாடியும், போராடியும் வந்திருக்கிறது.**

**“இந்தியா” கூட்டணி தொடங்கியதிலிருந்து அக்கூட்டணியின் மையச் சக்தியாக திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கியது. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்தான் நாட்டு மக்களுக்கான முக்கியப் பிரச்சினைகளில் முதன்மைக் குரல் எழுப்பி வந்தார். இது இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளும் அக்கட்சிகளின் தலைவர்களும் நன்கு அறிவார்கள்.**

**தமிழ்நாட்டில் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத்தேர்தலுக்குப் பின், காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இழைத்த துரோகத்தினால் மிகுந்த மனக்காயமுற்றிருக்கும் கழகத் தோழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற வகையில், வருகின்ற ஜூன் 8–ஆம் தேதி டெல்லியில் நடைபெறும் “இந்தியா” கூட்டணிக் கூட்டத்தில், அதாவது காங்கிரஸ் பங்கேற்கும் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்காது.**

**இக்கூட்டத்தில் பங்கேற்காத அதேநேரத்தில் – இந்தக் கூட்டத்தில் இடம்பெற்றுள்ள மற்ற கட்சிகள் முன்வைக்கும் நாட்டு நலனைப் பாதிக்கும் பிரச்சினைகளில், திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் குரல் கொடுக்கும்.**

**“அண்ணா அறிவாலயம்”**
**சென்னை–18.**
**நாள் : 04–06–2026**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

### ம.சேசுராசு தலைமையில்

# மும்பையில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

## கழக முன்னணியினர் பங்கேற்றனர்!

மும்பை, ஜூன் 6 -

மும்பை தி.மு.க. சார்பில் தாராவி கலைஞர் மாளிகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்தநாள் விழா மும்பை தி.மு.க. பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெற்றது.

பொறுப்புக்குழு உறுப்பினர் மாறன் ஆரியசங்காரன் வரவேற்புரையாற்றினார்.

பொறுப்புக்குழு உறுப்பினர் அன்பழகன் பொற்கோ பிறந்தநாள் கேக் வெட்டி அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார்.

இவ்விழாவில் மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன், மும்பை பகுத்தறிவாளர் கழக தலைவர் அ.இரவிச்சந்திரன், காரை கரு. இரவிந்திரன், திருவள்ளுவர் நற்பணி மன்றம் தலைவர் ந.இராதாகிருஷ்ணன், மனித நேயம் அமைப்பாளர் சங்கர் திராவிட், தமிழ் ஓட்டுநர் சங்க தலைவர் இரா.ரவிரஜினி, ஜி.முத்து, திராவிடர் கழக பொருளாளர் பெரியார் பாலா, துணைத் தலைவர் இ.அந்தோணி, பகுதி தி.மு.க. செயலாளர்கள் இரா.காந்தி, அப்துல் திவான் மைதீன், சேலம் மா.சீனிவாசன், வே.இரவிச்சந்திரன், பி.இராமையா, தி.மு.க. முன்னாள் இளைஞரணி துணை அமைப்பாளர் பொய்சர் க.மூர்த்தி, களந்தை சண்முகவேலு, கோ.கருணாநிதி, அன்பில் ரஞ்சன் காளியப்பன், குப்பன், கணேஷ் போன்ற ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

தே.ஸ்டீபன் நன்றியுரையாற்றினார்.

அலங்கரிக்கப்பட்ட கலைஞரின் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது. விழா முடிவில் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# காஞ்சி மணிமொழியார்

### ஜூன் 7 (1972)



சென்னை மாநகரத்தில் கழகம் வளர்ந்திட தொய்வின்றி பணியாற்றியவர்.

1937–38ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவர்.

கழகத்தில் துணைப் பொதுச் செயலாளராகப் பணியாற்றியவர்.

1962ஆம் ஆண்டு சென்னை தியாகராயநகர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெருமதிப்புக்குப் பாத்திரமானவர்களில் முக்கியமானவர் இவர்.

“சின்ன உருவமும், சன்னமான குரலும், பொன்னான நெஞ்சும், மின்னும் விழிகளும் படைத்தவராய், துடிப்புமிகு நடையும், துவளாச் சுறுசுறுப்பும், தொண்டாற்றும் ஆர்வமும், தியாக மனப்பாங்கும் ஒருங்கே ஒருருவாய்த் திகழ்ந்தவர்” என தலைவர் கலைஞர் அவர்களாலேயே புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**